தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.11.2013**

## கரும்புக்கு ஆதரவு விலையை அரசு உயர்த்த வேண்டும்: முன்னாள் முதல்வர் சதானந்தகௌடா

கரும்புக்கான ஆதரவு விலையை அரசு உடனடியாக உயர்த்த வேண்டும் என்று முன்னாள் முதல்வர் சதானந்தகௌடா தெரிவித்தார்.

பெல்காம் சட்டமேலவையில் செவ்வாய்க்கிழமை கரும்புகான ஆதரவு விலையை உயர்த்துவது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசியது: டன் கரும்புக்கு அரசு ரூ. 2500 ஆதரவு விலையை நிர்ணயித்துள்ளது. கரும்பு விளைவிப்பத்தில் விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த விலை ஒருபோதும் அவர்களுக்கு போதுமானதாக இருக்காது. எனவே அரசு கரும்புக்கு ஆதரவு விலையை உயர்த்தித் தரவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கரும்புக்கான ஆதரவு விலையை நிர்ணயிப்பதில் அரசுக்கும், விவசாயிகளுக்கு பிரச்னைகள் ஏற்பட்டு வருகின்றது. இதனை கருத்தில் கொண்டு அரசு விவசாயிகளுக்கு சமாதானம் ஆகும் வகையில் ஆதரவு விலையை உயர்த்த வேண்டும். கரும்பு விளைச்சலுக்கான செலவைவிட, ஆதரவு விலை குறைவாக நிர்ணயித்து இருப்பதால் விவசாயிகளுக்கு எந்த பலனும் இல்லை. கரும்பு மற்றும் சக்கரை உற்பத்தியால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 13 ஆயிரம் கோடி வருவாய் கிடைத்து வருகிறது. இதனை கருத்தில் கொண்டு ஆதரவு விலையை உயர்த்த வேண்டும் என்றார் அவர்

**அதிகாரிகள் உறுதியை ஏற்று மீனவர் போராட்டம் ஒத்திவைப்பு**

மீனவர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் நடக்க இருந்த ஆர்ப்பாட்டம், அதிகாரிகள் உறுதிமொழியை ஏற்று ஒத்தி வைக்கப்பட்டது.

கடலூர் துறைமுகத்தில் மீன் பிடி படகுகளுக்கு இடையூறாக உள்ள, வெளிமாநில ராட்சத பார்ஜர்களை அகற்ற வேண்டும். துறைமுகத்தில் மூடப்பட்டுள்ள கேட்டுகளை திறக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, மீனவர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை(நவ.26) கடலூர் துறைமுகம் அலுவலகம் எதிரில், ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக, கடலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மாலை பேச்சுவார்த்தை நடந்தது. வட்டாட்சியர் ராஜாராம் தலைமை வகித்தார். துறைமுக அதிகாரி அன்பரசு, முதுநகர் இன்ஸ்பெக்டர் விஜிக்குமார், மீனவர் வாழ்வுரிமை இயக்க நிறுவனத் தலைவர் ஏகாம்பரம், சங்க பொதுச் செயலர் தங்கேஸ்வரன், மாவட்டச் செயலர் முருகன், ரவிசங்கர், கன்னியப்பன் மற்றும் நிர்வாகிகள், மீனவ பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்றனர்.

பேச்சுவார்த்தையில், பார்ஜரை அகற்ற அதிகாரிகள் உறுதி அளித்ததைத் தொடர்ந்து, நடக்க இருந்த ஆர்ப்பாட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

**விவசாய தொழிலாளர்களுக்கு தினக் கூலி ரூ.300 ஆக நிர்ணயிக்க வலியுறுத்தல்**

தமிழகத்தில் விவசாய தொழிலாளர்களுக்கான தினக்கூலியை ரூ.300 என தமிழக அரசு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இச்சங்கத்தின் தமிழ் மாநிலக்குழுக்கூட்டம் கடலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு பிறகு மாநில தலைவரும், எம்எல்ஏவுமான ஏ.லாசர் செய்தியாளர்களிடம் கூறியது. அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் 8-வது மாநில மாநாடு தேனி மாவட்டத்தில் டிசம்பர் 19,20,21 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற உள்ளது.

19-ம் தேதி விவசாய தொழிலாளிகளின் பேரணியும் அதனை தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது. 20, 21 இரு நாட்கள் பிறதிநிதிகளின்

மாநாடு நடைபெற உள்ளது.  மாநாட்டில் அகில இந்திய தலைவர்கள் பிருந்தாகாரத், விஜயராகவன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

தமிழகத்தில் 95 லட்சம் விவசாய தொழிலாளர்கள் உள்ளனர், இவர்களுக்கு வேலை நெருக்கடி உள்ளது.  இந்தாண்டு தென்மேற்கு பருவமழை தமிழகத்திற்கு பெருமளவில் கிடைக்கவில்லை. வடகிழக்கு பருவ மழையும் எந்தளவிற்கு இருக்கும் என்று தெரியவில்லை. தமிழக விவசாயத்திற்கு பாசனம் தரும் பெரும்பகுதி அணைகளில் தண்ணீர் இல்லை.

இந்த நிலை தொடர்ந்தால் கடந்த ஆண்டைபோல், இந்தாண்டும் கடும் வறட்சி நிலவுமோ என்ற அச்சம் உள்ளது. இதனால் விவசாய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கேள்விக்குறியாகி உள்ளது. டெல்லா பகுதிகளில் இரண்டு மாதங்களுக்கு குறையாமல் விவசாய பணிகள் நடைபெறும், தற்போது ஒரே நேரத்தில் அதிலும் இயந்திரத்தை புகுத்தியதால் 15 நாட்களில் முடிந்து விட்டன.

இந்நிலையில் விவசாய தொழிலாளர்கள் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தைதான் நம்பி உள்ளனர். இத்திட்டத்தின்கீழ் 100 நாள் வேலையை 250 நாட்களாக உயர்த்தி வழங்க வேண்டும்.  இத்திட்டத்தில் வழங்கப்படும் ரூ.148 கூலியை முழுமையாக வழங்க வேண்டும்.

மத்திய அரசு அனைத்து வகையான விவசாய வேலைகளுக்கும் ரூ.182 தினக்கூலியை வழங்க அறிவித்துள்ளது. அதை தமிழகத்தில் அமலாக்க வேண்டும். 2009-க்கு பிறகு தமிழகத்தில் கூலி திருத்தம் செய்யப்படவில்லை. இன்றைய சூழலில் ஏறி உள்ள விலைவாசிக்கு ஏற்ப ரூ.300 தினக்கூலியாக நிர்ணயிக்க வேண்டும்.

இந்தியாவில் 10 கோடி பேருக்கு குடியியிருக்க வீடு இல்லை,  தமிழகத்தில் 35 லட்சம் பேர் மனு கொடுத்து காத்திருக்கின்றனர்.  இவர்களுக்கு ஒரு ஆண்டுக்குள்ளாக பட்டா வழங்க வேண்டும்.

கோமாறி நோய் தாக்குதலால் மிகப்பெரிய எண்ணிக்கையில் ஆடு, மாடுகள் இறந்துள்ளன.  வாழ்வாதாரத்தை இழந்துள்ள விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்.

எரிவாயு கொண்டு செல்லும் குழாய்கள் விவசாய நிலத்தில் புதைப்பதை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர். தமிழக அரசும் தடுத்து நிறுத்தியது. தற்போது அந்த நிறுவனத்திற்கு சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. இந்த தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. விவசாயத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்றார்.

அகில இந்திய துணைத் தலைவர் எஸ்.திருநாவுக்கரசு, மாநில பொதுச்செயலர் ஜி.மணி, பொருளாளர் கே.கலியன், மாநில செயலர் டீ.ரவிந்திரன், மாவட்ட செயலர் எம்.பி.தண்டபாணி, தலைவர் வி.சேதுராஜன் உடனிருந்தனர்.

**செஞ்சி மார்க்கெட் கமிட்டியின் கதவை மூடி விவசாயிகள் போராட்டம்**

நெல்லுக்கான கொள்முதல் பணம் பட்டுவாடா செய்யக் கோரி, செஞ்சி மார்க்கெட் கமிட்டியின் கதவை மூடி விவசாயிகள் செவ்வாய்க்கிழமை இரவு போராட்டம் நடத்தினார். பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் பூச்சி மருந்தை குடிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் ஏராளமான விவசாயிகள் நெல் மற்றும் மணிலா உள்ளிட்ட தானியங்களை விற்பனை செய்கின்றனர். கொள்முதல் செய்யப்படும் விளைபொருள்களுக்கு முறையாக பணம் பட்டுவாடா செய்யப்படுவதில்லையாம்.

இதுதொடர்பாக வட்டாட்சியர் அலுவலகத்தில், கடந்த சில மாதங்களுக்கு முன் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில், விவசாயியிடம் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படாமல் மார்க்கெட் கமிட்டியில் இருந்து மூட்டைகளை வெளியே எடுத்துச் செல்லமுடியாது என வியாபாரிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆனால், இவை முறையாக பின்பற்றப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், மார்க்கெட் கமிட்டியில் கடந்த அக்டோபர் 24ஆம் தேதி நெல் மூட்டைகளை விற்பனை செய்த வடக்குப்பட்டு முனுசாமி என்ற விவசாயிக்கு, கொள்முதல் பணம் ரூ.1.10 லட்சம் வரை பட்டுவாடா செய்யப்படவில்லையாம்.

தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டும் பணம் கிடைக்காததால், விரக்தியடைந்த முனுசாமி, தற்கொலை செய்யும் நோக்கில் செஞ்சி மார்க்கெட் கமிட்டி முன்

செவ்வாய்கிழமை இரவு பூச்சி மருந்தை குடிக்க முயன்றார். அப்போது, அருகில் இருந்த விவசாயிகள் பாட்டிலை பறித்து தற்கொலை முயற்சியை தடுத்தனர்.

இதேபோல, வடக்குபட்டு விவசாயி ஆறுமுகம் என்பவருக்கு ரூ.92 ஆயிரமும், ராஜேந்திரன் என்ற விவசாயிக்கு ரூ.48 ஆயிரமும் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளதாக கூறப்படுகிறது. இவர்கள் மூவரும் செஞ்சி மார்க்கெட் கமிட்டியின் கதவை மூடி வாகனங்கள் உள்ளே விடாமல் போராட்டம் நடத்தினர்

**கொடைக்கானலில் ரூ.1.96 கோடியில் தோட்டக்கலைத் திட்டப் பணிகள்**

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் ரூ.1 கோடியே 96 லட்சம் ஒதுக்கீட்டில் தோட்டக்கலைத் திட்ட மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொடைக்கானல் வட்டாரத்தில் 18,596 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. சுமார் 2.31 லட்சம் மெட்ரிக் டன் தோட்டக்கலை விளை பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இது குறித்து தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜாமுகமது கூறியதாவது:

தமிழக அரசு, கொடைக்கானல் வட்டாரத்தில் ரூ.1 கோடியே 96 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்ட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. கொடைக்கானல் வட்டாரத்தில் 2013-2014-ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்ட 50-சத மானியத்தில் ரூ.1 கோடியே 86.90 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் பழவகைகள், மலர்கள், கிழங்கு வகைகள், மருத்துவ பயிர்கள், நறுமணப் பயிர்கள், வாசனைப் பயிர்கள், பசுமைக்குடில்கள் மற்றும் மண்புழு உரப்படுக்கைகள் போன்ற இனங்களுக்காக 50சத மானியத்தில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் விவசாய நிலங்கள் 325 எக்டேர் பரப்பில் விரிவாக்கப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பதப்படுத்தும் கூடாரம் 54 சதுர மீ பரப்பில் அமைக்க 50 சத மானியம் அதிகபட்சமாக ரூ.1.50 லட்சம் வழங்கப்படும். 6 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்சாதன வாகனம் வாங்கிட வங்கி கடனுடன் செலவின மதிப்பீட்டில் 40சதம் மானியமாக அதிகபட்சமாக ரூ.9.6 லட்சம் மானியம் வழங்கிடவும்,

பழங்களை பழுக்க வைக்கும் ஒரு மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட அறைகட்ட வங்கிகடனுடன் இணைந்த திட்டத்திற்கு செலவின மதிப்பீட்டில் 40சதம் மானியமாக வழங்கிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இதற்காக விவசாயிகள், தனியார் தொழில்முனைவோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்துடன், மாவட்ட இயக்கக் குழுவின் ஒப்புதல், வங்கிக் கடன் ஒப்பளிப்பு கடிதம், நில உரிமை ஆவணங்கள், மனுதாரரின் புகைப்பட அடையாள சான்று, கட்டட மதிப்பீடு உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக ரூ. 10 லட்சம் செலவில் 500ஹெக்டேர் பரப்பிற்கு 50 சத மானியத்தில் வீரிய ஒட்டு ரக காய்கறி விதைகளும், தரமான பழமர நாற்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

கொடைக்கானல் மேல்மலை மற்றும் கீழ்மலைப் பகுதிகளில் நிலவும் சீதோஷ்ண நிலையால் காரனேசன் கொய்மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பசுமைக் குடில்கள் அமைத்து 15000-சமீ பரப்பில் கொய்மலர்கள் சாகுபடி செய்ய நடப்பு நிதியாண்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

**மேட்டுப்பாளையத்தில் 23 கிராம விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளை பாதுகாக்கத் தவறியதாக வனத்துறையை கண்டித்தும், விவசாயிகளுக்கு உரிய இழப்பீடும், பாதுகாப்பும் வழங்க அரசை வலியுறுத்தியும் தேக்கம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள 23 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மேட்டுப்பாளையத்தில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தேக்கம்பட்டி 23 கிராம விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு, நீர் நிலைகள்- சுற்றுச்சூழல் பொதுநல இயக்கம், காரமடை வட்டார சமூகநல அமைப்புகள் சார்பில் மேட்டு ப்பாளையம் நகர பேருந்து நிலையம் முன்பு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் டி.பாண்டுரங்கன் தலைமை வகித்தார். கிராம விவசாய சங்கத் தலைவர்கள் திப்பையன், சுப்பைய கவுடர், கிருஷ்ணமூர்த்தி, குமாரசாமி, தங்கவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைப்புக் குழு செயலர் ரங்கராஜ் வரவேற்றார்.

ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து, பாண்டுரங்கன் பேசியது:

காட்டு யானைகளின் அட்டகாசத்தை தடுக்க வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் மூலம் வனத்துறையினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு, பாதுகாப்பு வழங்கவும், நெல்லிமலை பகுதியில் சுற்றித்திரியும் காட்டு யானைகளை கும்கி மூலம் வனப்பகுதிக்குள் விரட்டவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண ஆட்சியர் தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

அடுத்த கட்டமாக 23 கிராம விவசாயிகளின் குடும்பத்தினர் சார்பில் மேட்டுப்பாளையத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

இதில் கிராம விவசாய பிரதிநிதிகள் நெல்லித்துறை கண்ணப்பன், பன்னீர்செல்வம், ஊர் கவுடர் ராஜன், சிவராமன் உள்பட தாசனூர், குறும்பனூர், கிட்டாம்பாளையம், தொட்டதாசனூர், பஞ்சுக்காடு, தேக்கம்பட்டி மற்றும் சுற்றியுள்ள 23 கிராமங்களை சேர்ந்த 700-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். விவசாய ஒருங்கிணைப்புக் குழு சார்பில் திராவிடமணி நன்றி கூறினார்.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 67.80 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரபடி 67.80 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,567 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கன அடி நீரும், வாய்க்காலீல் 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 10.56 டி.எம்.சி.

**போலி உரம் தயாரிப்பு குடோனுக்கு சீல்வேளாண்மைத் துறை நடவடிக்கை**

திண்டுக்கல் அருகே போலி உரம் தயாரித்த குடோனுக்கு வேளாண்மைத் துறை அதிகாரிகள் திங்கள்கிழமை சீல் வைத்தனர். கைப்பற்ற உரத்தின் மாதிரிகளை ஆய்வு செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

திண்டுக்கல் அடுத்த பள்ளப்பட்டி கிராமத்தில் பழைய தோல் தொழில்சாலையில் உரம் தயாரிக்கப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர்(தரக்கட்டுப்பாடு) கே.செல்வராஜுக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன்பேரில் வேளாண்மை அலுவலர் சின்னச்சாமியுடன் சம்பவ இடத்திற்கு சென்று திங்கள்கிழமை ஆய்வு செய்துள்ளார்.

அப்போது பொட்டாஷ் உரச் சாக்கில் நிரப்பி, லாரியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த 162 மூட்டைகள் பிடிபட்டன. விசாரணையில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் கழிவுகளிலிருந்து முடிகளை நீக்கிவிட்டு, உரமாக தயாரிப்பது தெரிந்துள்ளது. இந்த உரங்களை பழைய பொட்டாஷ் சாக்கு மூட்டைகளில் நிரப்பி வெளிமாவட்டங்களுக்கு அனுப்பியதும் கண்டுபிடிக்கப்பட்டது.

128 மூட்டைகளுடன் அந்த குடோனுக்கும் அதிகாரிகள் சீல் வைத்தனர். உரத்தின் மாதிரியை எடுத்து, திண்டுக்கல் மற்றும் பரமக்குடி பரிசோதனை மையங்களுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.குடோன் காவலாளியான ராதாகிருஷ்ணனிடம் விசாரித்தபோது, முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்துள்ளார். லாரி ஓட்டுநரான விருத்தாச்சலத்தைச் சேர்ந்த ஜி.வீரமணியிடம் கேட்ட போது, அரியலூரில் உள்ள தோட்டத்துக்கு ஏற்றிச் செல்வதாக தெரிவித்துள்ளார்.உர மூட்டைகளுடன் நின்ற லாரியும், வீரமணியையும் திண்டுக்கல் தாலுகா போலீஸாரிடம் அதிகாரிகள் ஒப்படைத்தனர். போலி உர மூட்டைகள் தயாரித்ததாக, நேருஜிநகரைச் சேர்ந்த மணி என்பவர் மீதும் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுகள் கிடைக்கப் பெற்ற பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் செல்வராஜ் தெரிவித்தார்.

**ரப்பர் விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ. 135 ஆக குறைந்தது**

குமரி மாவட்டத்தில் ரப்பர் விலை, கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் சரிவடைந்துள்ளதால் ரப்பர் விவசாயிகள் கவலைக்குள்ளாகியுள்ளனர்.

மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் ரப்பர் பால் வெட்டுத் தொழில் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் ரப்பர் உற்பத்தியும் முடங்கியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத சரிவு: இந்திய ரப்பர் சந்தையில் கடந்த ஒரு மாதமாக ரப்பர் விலை தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. கடந்த மாதத்துக்கு முன்பு வரை கிலோ ரூ. 175 என்ற அளவில் இருந்த ரப்பர் விலை, தற்போது கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத வகையில் வெகுவாகச் சரிந்துள்ளது. திங்கள்கிழமை கோட்டயம் சந்தையில் ரப்பரின் விலை கிலோ ரூ. 135.50 ஆக குறைந்தது.

கேரளா மற்றும் குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ரப்பரின் விலை தொடர்ந்து சரிந்து வருவது விவசாயிகளை கவலைக்குள்ளாக்கியுள்ளது. மேலும் விலை சரியக்கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ரப்பர் விலை வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

**குமரி மாவட்டத்தில் தேங்காய் விலை கடும் உயர்வு**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கன்னியாகுமரியை அடுத்த மகாதானபுரம் சந்தையில் செவ்வாய்க்கிழமை ஒரு கிலோ தேங்காய் ரூ. 30-க்கு விற்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னைமரம் வளர்க்காத வீடுகளே இல்லை எனச் சொல்லும் அளவுக்கு இருக்கும். மாவட்டத்தில் ஈத்தாமொழி, குளச்சல், சொத்தவிளை, பழவிளை, அகஸ்தீசுவரம், மயிலாடி, தெங்கம்புதூர், சூரங்குடி, சுண்டப்பற்றிவிளை உள்ளிட்ட பகுதிகளில் தேங்காய் அதிகமாக விளைச்சலாகிறது.

இங்கு விளைச்சலாகும் தேங்காய்கள் அடர்த்தியாகவும், எண்ணைய் சத்து அதிகமாகவும் உள்ளதால் தூத்துக்குடி, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகமாக உள்ள தேங்காய் எண்ணைய் தயாரிக்கும் ஆலைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதுதவிர குமரி மாவட்டத்தில் விளைச்சலாகும் இளநீர்களில் அதிகளவில் தண்ணீர் இருப்பதால் சென்னை, மதுரை, தூத்துக்குடி உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கு கணிசமாக இளநீர் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. இளநீருக்காக காய் பருவத்திலேயே அதிகமாக வெட்டப்படுவதால் தேங்காய் உற்பத்தி கணிசமாக குறைந்து வருகிறது. இந்நிலையில் தற்போது ஐயப்ப பக்தர்கள் சீசன் என்பதால் தேங்காய்களின் தேவை மேலும் அதிகரித்துள்ளது. இதனால் தேங்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்னர் கிலோ ரூ. 19-க்கு விற்கப்பட்ட தேங்காய் ரூ. 30-ஐ எட்டியுள்ளது. ஏற்கனவே காய்கனிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ள நிலையில் தேங்காயின் திடீர் விலை ஏற்றத்தால் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

உணவக உரிமையாளரான எம். கமால் கூறியதாவது: தேங்காய் விலை உயர்வால் பொதுமக்களோடு நாங்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளோம். ஏற்கெனவே வெங்காய விலை உயர்வால் ஆம்லெட்களில் வெங்காயத்துடன் முட்டைகோஸ் சேர்த்து பயன்படுத்தி வருகிறோம். இந்நிலையில் தேங்காய் சட்னிக்கு பதிலாக கடலை சட்னி, புதினா சட்னி வழங்க முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

**விளை நிலங்களில் எரிவாயு குழாய் பதிக்க அனுமதி: உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும்- தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்தல்**

விளை நிலங்களில் எரிவாயு குழாய் பதிக்க கெயில் நிறுவனத்துக்கு உயர் நீதிமன்றம் அளித்துள்ள அனுமதியை எதிர்த்து, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. தவிர, விவசாயிகள் தனித்தனியாக மேல்முறையீடு

செய்ய தேவையான சட்ட உதவிகளும் செய்யப்படும் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலர் வி.காவேரி, செவ்வாய்க்கிழமை சேலத்தில் செய்தியாளர்களிடம் கூறியது:

சீனாவில் கடந்த வாரம் எண்ணெய் குழாய் வெடித்ததில் பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டது. அதேபோல, இங்கு விளை நிலங்கள் வழியாக அமைக்கும் எரிவாயு குழாய்கள் வெடித்தால் அதன் பாதிப்பு 5 கி.மீ. தொலைவுக்கு இருக்கும் எனக் கூறப்படுகிறது.

எனவே, தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட தமிழக அரசு உச்ச நீதிύமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும். அவ்வாறு அரசு மேல்முறையீடு செய்யும்பட்சத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியும் இணைந்து நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும். உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கெயில் நிறுவனம் விளை நிலங்களில் எரிவாயு குழாய்களை பதிக்க முடியாது. ஏனெனில், விவசாயிகளை சமாதானம் செய்து எரிவாயு குழாய் பதிக்க தமிழக அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இதன்படி, பல கூட்டங்கள் நடத்தி விவசாயிகளை சமாதானம் செய்திட பல ஆண்டுகளாகக் கூடும். தவிர, பாதிக்கப்படும் விவசாயிகளும் தனித்தனியாக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவும் வாய்ப்புள்ளது என்பதால் அதுவரை கெயில் நிறுவனம் எரிவாயு குழாய்களை பதிக்க முடியாது. இதன்படி, விவசாயிகள் மேல்முறையீடு செய்ய சட்டரீதியான உதவிகளை தமிழக வாழ்வுரிமைக் கட்சி மேற்கொள்ளும்.தற்போது நீதிமன்றங்களில் நடக்கும் விவாதங்களை யாரும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. இதை வழக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பாக நீதிமன்றங்களில் கண்காணிப்பு கேமராக்கள் வைக்க வேண்டும். தவிர, மகளிருக்கென தனி நீதிமன்றம் உள்ளதுபோல விவசாயிகளுக்காகவும் தனி நீதிமன்றம் அமைக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகளின் பிரச்னைகளை விரைவில் தீர்க்க முடியும் என்றார் அவர்.

மாநிலச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெயமோகன், மாநகர் மாவட்டச் செயலர் எஸ்.வெங்கடேஷ், மாவட்டத் தலைவர் கே.பாலு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முட்டை விலை முதல் முறையாக ரூ. 4-க்கு மேலாக உயர்வு

நாமக்கல் மண்டல வரலாற்றில் முதல் முறையாக முட்டை பண்ணைக் கொள்முதல் விலை திங்கள்கிழமை ரூ.4-க்கு மேலாக உயர்ந்தது.வட மாநிலங்களில் உயர்ந்து வரும் முட்டை விலை காரணமாக, நாமக்கல் மண்டல முட்டை கொள்முதல் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மும்பை, தில்லி, கொல்கத்தா, பர்வாலா உள்ளிட்ட மண்டலங்களில் முட்டை நுகர்வு வேகமாக உயர்ந்து வருகிறது. தவிர, புரட்டாசி மாதம் முடிந்ததை அடுத்து முட்டை நுகர்வு அதிகரித்ததன் காரணமாக, நாமக்கல் மண்டல முட்டை பண்ணைக் கொள்முதல் விலையும் படிப்படியாக உயர்த்தப்பட்டு வந்தது.இதன்படி, கடந்த அக்டோபர் 28-ஆம் தேதி ரூ.3.61ஆக இருந்த முட்டை விலை, நவம்பர் 2-இல் ரூ.3.70, நவம்பர் 7-இல் ரூ.3.76, 11-இல் ரூ.3.81 என உயர்ந்து, நவம்பர் 12-ஆம் தேதி வரலாறு காணாத விலையேற்றமாக ரூ.3.90ஐ அடைந்தது. இதன்பிறகு, நவம்பர் 14-ஆம் தேதி ரூ.3.96, நவம்பர் 23-இல் ரூ.3.98ஆக உயர்ந்து திங்கள்கிழமை முதல் முறையாக ரூ.4.03ஆக அதிகரித்தது.வட மாநிலங்களில் முட்டை நுகர்வு அதிகரித்து விலையும் உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டல முட்டை விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அலுவலர்கள் தெரிவித்தனர்.அவர்கள் மேலும் கூறியது: கார்த்திகை மாதம் காரணமாக சபரிமலை திருவிழா தொடங்கியிருப்பதால் தமிழகம், கேரள மாநிலங்களில் பரவலாக முட்டை நுகர்வு 20 சதம் வரை சரிந்துள்ளது. எனினும், வட மாநிலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டல விலையும் உயர்த்தப்பட்டு வருகிறது.தீவன மூலப்பொருள்களின் விலையேற்றத்தை ஒப்பிடுகையில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலையின் இந்த உயர்வு அவசியமாகிறது என்றனர் அவர்கள்.முட்டை விலை அதிகரித்து வருவது பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதைத்தொடர்ந்து, பண்ணைகளில் உள்ள முட்டைகளை வேகமாக சந்தைக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**கனிமொழியிடம் ஆத்தூர் பகுதி விவசாயிகள் மனு**

சேலத்தில் நடைபெற்று வரும் புத்தகக் கண்காட்சியில் பல்வேறு தலைப்புகளில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் குவிக்கப்பட்டுள்ளது.

நேஷனல் புக் டிரஸ்ட் ஆஃப் இந்தியா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்ும் இணைந்து சேலம் பழைய பேருந்து நிலையம் அருகே போஸ் மைதானத்தில் 29ஆவது புத்தகக் கண்காட்சியை நடத்துகின்றன. கடந்த நவம்பர் 15-ஆம் தேதி தொடங்கி மூன்று மாதங்களுக்கு நடக்க உள்ள இந்தக் கண்காட்சியில், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உள்ளிட்ட அனைத்து பதிப்பகங்களுக்குள்பட்ட இலக்கியம், நாவல், கதை, கவிதை, கட்டுரை, அறிவியல், வரலாறு, புராணம், சிறுவர் இலக்கியம் என அனைத்து வகையான புத்தகங்களும், போட்டித்தேர்வுக்கான புத்தகங்களும் என 50 ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அனைத்து பதிப்பக புத்தகங்களுக்கும் 10 சத தள்ளுபடி விலையில் அளிக்கப்படுகிறது. அதிகப்படியான விலைக்கு வாங்கப்படும் புத்தகங்களுக்கும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்க்கு சொந்தமான புத்தகங்களுக்கும் கூடுதல் தள்ளுபடியும் அளிக்கப்படுகிறது.இந்தக் கண்காட்சி தினசரி காலை 9.30 முதல் இரவு 9.30 மணி வரை நடைபெறுகிறது  என்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் மேலாளர் டி.சத்தியசீலன் தெரிவித்தார்.அவர் மேலும் கூறுகையில், கண்காட்சியில் அனைத்து பதிப்பகங்களுக்கு உள்பட்ட பல்வேறு தலைப்பு புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன. வாசகர்களுக்கு  தேவைப்படும் பட்சத்தில் வெளியில் இருந்தும் புத்தகங்கள் தருவித்து அளிக்கப்படும் என்றார் அவர்.இந்த புத்தகக் கண்காட்சியை பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பெருமளவில் பார்வையிட்டு புத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர்

**தருமபுரியில் 29-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தருமபுரியில் வருகிற 29-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.இதுகுறித்து ஆட்சியர் கே.விவேகானந்தன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வருகிற 29-ஆம் தேதி காலை 11 மணியளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை துறை உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.எனவே, மாவட்ட விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகள் மற்றும் புகார்களைத் தெரிவித்து பயன்பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேய்பிறை அஷ்டமி: கால பைரவர் கோயிலில் சிறப்பு வழிபாடுதருமபுரி, நவ.25: தேய்பிறை அஷ்டமியையொட்டி அதியமான்கோட்டை கால பைரவர் கோயிலில் திங்கள்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த ஸ்ரீ தட்சண கால பைரவர் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் தேய்பிறை அஷ்டமியையொட்டி திங்கள்கிழமை சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது.

முன்னதாக, மஹா கணபதி ஹோமம், அஷ்டபைரவ ஹோமம், கோ பூஜை, மஹா பூரணஹிதி மற்றும் மஹா அபிஷேகம் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு பைரவர் அருள் பாலித்தார். இதையொட்டி, பக்தர்கள் சாம்பல் பூசணியில் விளக்கேற்றி வழிபட்டனர். இதில், தருமபுரி, சேலம், பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கால பைரவரை வழிபட்டனர். பக்தர்கள் வருகையொட்டி அதியமான்கோட்டை போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்

**அருப்புக்கோட்டையில் மழையளவு**

அருப்புக்கோட்டையில் கடந்த வாரத்தில் குறைந்த அளவு மழையே பதிவாகி உள்ளது. குறிப்பாக சென்ற வாரத்தில் 18ஆம் தேதி, 22ஆம் தேதி மற்றும் 24ஆம் தேதிகளில் பெய்த மொத்த மழையளவு 10 மி.மீ. மட்டுமேயாகும்.

பருவமழைக் காலத்தில் பெய்ய வேண்டிய மழை தற்போது குறைந்த அளவே பெய்துள்ளது. இந்த நிலையில் அந்தமானில் ஏற்பட்டுள்ள புதிய காற்றழுத்தத் தாழ்வுநிலையால் எப்படியும் இந்த முறை மழை பெய்யும் என்று விவசாயிகளும் பொதுமக்களும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.11.2013**

**தென்னை மருத்துவம்**

தென்னை மருத்துவம் என்றால் புதுமையாக உள்ளது அல்லவா? அக்காலம் முதல் இன்று வரை கிராமப்புறங்களில் தென்னை வேர் முதல் பூக்கள் வரை உபயோகித்து ஏராளமான நோய்களை குணப்படுத்தியுள்ளனர்.

1. தென்னம்பூ: பெண்களுக்கு வரும் உதிரப்பாடு, அல்லது பெரும்பாட்டு நோய்களுக்கு இது நல்ல மருந்து. தென்னம்பூ விரிந்த அன்று எடுத்து (5 கதிர்) அரிசியை எடுத்து நன்கு அரைத்து, ஒரு எலுமிச்சை பழ அளவு எடுத்து பாலில் கலந்து குடிக்க நோய் குணமாகும்.

2. இளநீர்: நீர்க்கடுப்பு நோய்க்கு கருக்கு இளநீர் அருமருந்து ஆகும். மூலக்கடுப்பை கட்டுப்படுத்தும். சிறுநீர் கல் கடுப்புக்கு நல்ல மருந்தாகும்.

3. தென்னங்கள்: இதைக்குடித்தால் மலச்சிக்கல் நீங்கும். உடம்புக்கு கள் நல்ல பானமாகும்.

4. தேங்காய் பால்: தேன் வண்டு, அட்டை, பூரான் போன்ற விஷக்கடிகளுக்கு நல்ல மருந்து ஆகும். சிறு குழந்தைகளுக்க மூக்கில் நீர் வடிந்து மூக்கு துவாரத்தின் முன் வேர்க்குரு இருந்து புண்ணாகி இருந்தால் தேங்காய்ப்பாலை ஒத்தி எடுக்க குணமாகும். தேங்காய் பால் நல்ல ஆரோக்கியம் தரும் ஒரு பானமாகும்.

5. தென்னை மர பஞ்சு: ஓலை மட்டைகளின் இரு ஓரங்களிலும் மூட்டு அல்லது அடி, மட்டையை ஒட்டி காணப்படும் ஒரு வகை பூஞ்சானம் போன்ற பொருளே இது ஆகும். இது வெட்டுக்காய மருந்தாகும். ரத்தக்கசிவை நிறுத்தும்.

6. சிரட்டை: சிரட்டை தைலம் பயன்படுத்தினால் கை, கால்களில் வரும் எக்ஸிமா பற்றுகள், சொறி, சிரங்கு போன்றவை குணமாகும்.

7. தென்னங்குருத்து: இது உதர மூலத்தை தனித்து போக்கும். வலியை போக்கும்.

8. தேங்காய் நெய்: சிரங்கு, தீப்புண், படர்தாமரை, பல்நோய், தலைமயிர் வளர்தல் போன்றவற்றுக்கு பயன்படுகிறது.

9. தேங்காய்நார்: தென்னை நார், பாக் இரண்டையும் எரித்து சாம்பல் எடுத்து, சம அளவில் தேனில் கலந்து 2 அல்லது 4 முறை அருந்தினால் வாந்தி பேதி நிற்கும். நாரை எரித்து, கற்கண்டு சேர்த்து இளநீரில் கலக்கி ரத்தப்போக்கு அதிகமுள்ள இளம் பெண்களுக்கு கொடுத்தால் உடன் ரத்தப்போக்கு நிற்கும். நார் சாம்பலை ரத்தக்காயம் பட்ட இடத்தில் வைத்து பூசினால் ரத்தம் கசிவதைத் தடுக்கலாம். தென்னை மர பொருட்கள் மரம், மட்டை உட்பட அனைத்தும் மனிதனுக்குப் பயன்படுத்துவதுபோல் அதன் வேர் முதல் பூக்கள் வரை மனிதனுக்கு மருந்தாய் பயன்படுகின்றன. எனவே தென்னம்பிள்ளையை பிள்ளை போல் பேணிக்காப்போம்.

**சின்ன சின்ன செய்திகள்**

**கோழிக்கழிவுகள்:** கோழிப் பண்ணைத் தொழிலில் முக்கிய பிரச்னை அதன் கழிவுகளே ஆகும். இந்தியாவில் ஒரு ஆண்டிற்கு 4 மில்லியன் டன் கோழிக்கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. உலர்ந்த, ஈரமான கோழிக்கழிவுகளை படுக்கைகளாக பயன்படுத்தப்படும் பொருட்கள் போன்றவை



எரு தயாரிப்பில் பிறகு பயன்படுத்தப்படுகின்றன. மாற்று எருக்களை காட்டிலும் கோழி எருவில் நைட்ரஜன், பாஸ்பரஸ், கால்சியம் ஆகியவை அதிகமாக இருக்கின்றது. கோழியின் புதிய எச்சத்தில் 80 சதவீதத்திற்கும் மேலான அளவில் யூரிக் அமிலம், யூரியாவும் கனிம பாஸ்பரஸ் 0.3 முதல் 2.4 சதவீதமும், அங்கக பாஸ்பரஸ் 0.1 முதல் 1 சதவீதமும் காணப்படுகிறது. பொட்டாசியம், கால்சியம், மெக்னீசியம் நுண் உயிர்கள் போதுமான அளவு உள்ளன. கோழிக்கழிவிலிருந்து உருவாக்கப்படும் எரு மண்ணின் வளத்தை மேம்படுத்துகிறது. இந்த எருவில் கால்சியம் சத்தின் அளவு அதிகமிருப்பதால் உவரிதன்மையுள்ள களர் நிலங்களை சீர்செய்ய பயன்படுத்தப்படுகிறது.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றி கோழிக்கழிவுகளைப் பயன்படுத்தும் முறை: கோழிகளின் புதிய கழிவுகளை பயன்படுத்துவது மிக கடினமான ஒன்று. ஏனெனில் அதிக அளவு ஈரப்பதம் உள்ளதால் துர்நாற்றம் வீசக்கூடியதாக இருக்கும். கோழிக்கழிவுகளின் பாஸ்பேட், கந்தகம் ஆகியவற்றைச் சேர்த்து எருவாக்கும் போது ஊட்டச்சத்து நிறைந்த எரு கிடைக்கிறது கந்தகம். எருவின் கார அமிலத்தன்மையை குறைத்தல் அம்மோனியா வெளியேறுவது தடுக்கப்படுகிறது.

செஞ்சந்தனமரம்: அணுக்கதிர்வீச்சை தாங்கும் தன்மை கொண்டது பல அணுஉலைக் கூடங்களில் அணுக்கதிர்களை தடுக்கும் அரணாக இதைத்தான் பயன்படுத்துகிறார்கள். இந்தியாவில் விளையும் 90 சதவீதம் செல்களை ஜப்பான் நாடு இறக்குமதி செய்கிறது. ஜப்பான் நாட்டில் எக்ஸ்ரே, லேசர் போன்ற கதிர்வீச்சு சிகிச்சைகளைச் செய்யும் மருத்துவர்கள் சிகிச்சையின்போது கதிர்வீச்சைத் தடுப்பதற்காக சிறிதாக வெட்டப்பட்ட செஞ்சந்தன மரத்துண்டை தங்கள் சட்டை பையில் வைத்துக் கொள்கிறார்களாம். ஒலி அலைகளைத் தரும் இடம் திறன் கொண்டது. வெப்பத்தையும் அதிக அனல் கடத்தா கலை பொருட்கள் செய்வதற்கும், கிடாரி போன்ற இசை கருவிகள் செய்வதற்கும் இம்மரத்தை பயன்படுத்துகிறார்கள். இம்மரம் சரளை மற்றும் செம்மண், காந்தமண் வகைகளில் சிறப்பாக வளரக்கூடிய படுகை நிலத்தில் கூட நன்றாக வளரும். ஆனால் நல்ல வடிகால் வசதி அவசியம்.

ஆழமான மண் கண்டம் உள்ள மானாவாரி செம்மண் நிலங்களிலும் வளர்க்கலாம்.

உங்களுக்கு தேவையான செஞ்சந்தன மரக்கன்றுகளை அருகில் உள்ள வனத்துறை அலுவலகத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். செஞ்சந்தனம் பலன் கொடுக்க 20 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை ஆகும். மரங்கள் நன்றாக முதிர்ந்ததும் கிராம நிர்வாக அலுவலரிடம் சிட்டா வாங்கி மாவட்ட வனத்துறை அலுவலரிடம் கொடுத்தால் அவர்கள் நம்முடைய நிலத்தில் இருக்கும் மரங்களை வனச்சரகர் மூலம் ஆய்வு செய்து வெட்டுவதற்கு அனுமதி வழங்குவார்கள். வெட்டிய பிறகு வனத்துறை அதிகாரிகளை அணுகினால் ஒரு குறியீடு கொடுப்பார்கள். அந்த குறியீட்டைப் பொறுத்து மரத்தை விற்பனைக்காக இந்தியா முழுவதும் எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம். (தகவல்: நீலகிரி மாவட்ட வன காவலர் பதிரசாமி இ.வ.வ)

**முயல் வளர்ப்பு:** முயல்கறி மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கும். முயல்கறிகளில் குறைவான கொழுப்பு அதிக புரதம், குறைந்த கலோரி உள்ளதால் சாப்பிட்டவுடனே செரிமானம் ஆகிவிடும். எனவே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவு ஜெயன்ட் சாம்பல், ஜெயன்ட் சோவியத்சின்சிலா நியூசிலாந்து வெள்ளை ஆகிய ரகங்கள் இறைச்சிக்கு ஏற்றவை. இவை 3 மாதங்களில் 2 கிலோ முதல் 3 கிலோ வரை எடை வரக்கூடியது.100 முயல்களுக்கு 10 செண்ட் நிலம் என்கிற விகிதத்தில் பசுந்தீவனங்களாக சாகுபடி செய்ய வேண்டும்.



அருகம்புல், வேலியில் அகத்தி, மல்பெரி, தட்டைச்சோளம் போன்றவை முயல்களுக்கான தீவனங்கள் பருவமடைந்த முயல்களுக்கு தினமும் 200 கிராம் பசுந்தீவனம், 100 கிராம் அடர் தீவனமும் கொடுக்க வேண்டும். தொடர்புக்கு: முரளிதரன் 94431 82961

## வாத்து இறைச்சியின் குணாதிசயங்கள்



வாத்து இறைச்சி மற்றும் முட்டைகள் பண்டைக்காலம் முதலே தொன்று தொட்டு அனைத்து மக்களாலும் உண்ணப்பட்டு வந்துள்ளது. வாத்து இறைச்சியில் மனிதர்களுக்குத் தேவையான அமினோ அமிலங்கள் மற்றும் கொழுப்பு அமிலங்கள் முக்கியமாக அதிக அளவிலான பன்செறிவுறாக் கொழுப்பு அமிலம் உள்ளது. தற்போது கோழி இறைச்சி பிரபலமடைந்துள்ளது போல் வாத்து இறைச்சி அனைவராலும் விரும்பி உண்ணப்படுவதில்லை.

சாதாரணமாக, வாத்துக்கள் அதிக அளவில் பெரிய முட்டைகளை இடவல்லவை. மேலும் வாத்துக்களை வீட்டுப்புறத்தில் வளர்ப்பதன் மூலம் வீட்டின் அன்றாடத் தேவையான உணவும், வருமானமும், கிடைக்க ஏதுவாக அமையும். அது மட்டுமல்லாமல் வாத்துக்கள் குறைந்த அளவிலான தீவனத்தை உட்கொண்டு நல்ல உடல் எடையை அடைந்து முட்டையிடும் திறனையும் கொண்டுள்ளதால், குறைவான உற்பத்திச் செலவில் வாத்துக்களை வளர்த்து அதிக இலாபம் அடையலாம்.

வாத்து இறைச்சியின் குணாதிசயங்கள்: வாத்து இறைச்சியின் கொழுப்பில் உள்ள பாஸ்போலிபிட் என்ற வேதிப்பொருள், குறிப்பிடத்தக்க இறைச்சி வாசம் வருவதற்குக் காரணமாக அமைகிறது. வாத்து இறைச்சியில் இரும்புச் சத்தும், ஹீம் எனப்படும் வண்ண ஊக்கியும் அதிகளவில் உள்ளதால் இவ்வகை இறைச்சி மற்ற கோழி இறைச்சியை காட்டிலும் வண்ணம் மிகுந்ததாகக் காணப்படுகிறது.

கோழி இறைச்சியைப் போலவே, வாத்து இறைச்சியிலும் பன்செறிவுறாக் கொழுப்பு அமிலங்கள் அதிகளவில் உள்ளதால், மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்ற இறைச்சியாக கருதப்படுகிறது.

வாத்து இறைச்சியின் தன்மை, வாத்து இனத்தை மற்றும் தீவனத்தை மாறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக வெள்ளை பெகின் வாத்து இறைச்சி மஸ்கோவி இனத்தைக் காட்டிலும் அதிகக் கொழுப்பு நிறைந்த இறைச்சியாகும்.

வாத்து இறைச்சியில் அதிகளவில் ஒலியிக் அமிலம் எனப்படும் பன்செறிவுறாக் கொழுப்பு அமிலம் உள்ளது. அதுமட்டுமல்லாமல் பால்மிடிக் அமிலமும் உள்ளது. வாத்து இறைச்சியின் தீவனத்தில் மாற்றம் செய்வதன் மூலம் அதிகளவில் பன்செறிவுறாக் கொழுப்பு அமிலங்கள் உள்ளவாறு மாற்றி அமைக்கலாம்.

இறைச்சிக்காக வளர்க்கப்படும் வாத்துக்கள் 7 முதல் 8 வார வயதில், விற்பனை செய்யப்பட வேண்டும். சுவை மற்றும் சத்து மிகுந்த விலங்கினப் புரதமான இறைச்சி மற்றும் முட்டையை அதிகளவில் குறைவான காலகட்டத்தில் உற்பத்தி செய்ய வல்லவை. எனவே வாத்து இனங்கள் மனிதர்களின் புரதத் தேவையைப் பூர்த்தி செய்து மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு இறைச்சியைக் குறைவான செலவில் அளிக்கவல்ல ஒரு வரப்பிரசாதமாக அமையும் என் பது ஒரு திடமான கருத்தாகும். தகவல்: இர.க.கனிமொழி, மாதவரம் பால்பண்ணை, சென்னை-51.

**சர்க்கரை ஆலைகளுக்கு வட்டி இல்லாமல் கடன் வழங்க திட்டம்**



புதுடில்லி: மத்திய அரசு, சர்க்கரை ஆலைகளுக்கு வட்டி இல்லாமல் கடன் வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.உள்நாட்டில், சர்க்கரை விலை குறைந்து வரும் அதேநேரத்தில், சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி செலவினம் அதிகரித்துள்ளது. இதனால், இத்துறை நிறுவனங்கள் கடும் இடர்பாட்டை சந்தித்து வருகின்றன.

உணவு அமைச்சகம்இதை கருத்தில் கொண்டு, மத்திய உணவு அமைச்சகம், சர்க்-

கரை ஆலைகளுக்கு, வட்டி இல்லாமல் கடன் வழங்கும் வகையில், முக்கிய அமைச்-சரவை குழுவிற்கு பரிந்துரை செய்துள்ளதாக, உணவு அமைச்சகத்தின் செயலர் சுதிர் குமார் தெரிவித்தார்.அண்மையில், மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் தலைமையில் நடைபெற்ற, முக்கிய அமைச்சரவை குழு கூட்டத்தில், சர்க்கரை துறை சந்தித்து வரும் பிரச்னைகள் குறித்து பேசப்பட்டது என்பது குறிப்பிடத்தக்-கது.இந்திய சர்க்கரை ஆலைகள், கடும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளதால், வங்கிகள், இத்துறை நிறுவனங்களுக்கு கடன் வழங்க தயக்கம் காட்டி வருகின்றன. இந்நிலையில், வங்கிகள், இத்துறை நிறுவனங்களுக்கு கடன் கொடுக்கும் நிலையில், சர்க்கரை மேம்பாட்டு நிதியத்திலிருந்து, கடனுக்கான வட்டி வழங்கப்-படும்.மேம்பாட்டு நிதியம்தற்போது, சர்க்கரை மேம்பாட்டு நிதியத்தின் இருப்பில், 1,200 கோடி ரூபாய் உள்ளது.சர்க்கரை ஆலைகள், கடந்த இரண்டு பருவத்தில், அரசுக்கு செலுத்தியுள்ள, உற்பத்தி வரியின் அடிப்படையில், இரண்டாண்டு காலத்-திற்கு, 3,000 கோடி ரூபாய் கடன் வழங்கினால், அதற்கான, 380 – 400 கோடி ரூபாய் வட்டி, மேற்கண்ட நிதியத்திலிருந்து வழங்கப்படும்.உற்பத்தி:உள்நாட்டு தேவையை விட, சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளதால், இத்துறை நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன.இந்நிலையில், சர்க்கரை ஆலைகள், விவ-சாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகை, கடந்தாண்டு, 3,400 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தியில், இரண்டாம் இடத்தில் உள்ள உத்தரபிரதேச மாநிலத்தில், ஒரு குவிண்டால் கரும்பிற்கான ஆத-ரவு விலை, 280 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.ஆனால், சர்க்கரை ஆலைகள், ஒரு குவிண்டாலுக்கு, 225 ரூபாய்க்கு மேல் கொடுக்க இயலாது என, கூறி வருகின்-றன.நடப்பு 2013 – 14ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னாக இருக்கும் என, சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தெரிவித்-துள்ளன.தேவைகடந்த பருவத்தில், சர்க்கரை உற்பத்தி, 2.45 கோடி டன்னாக இருந்தது. அதேசமயம், சர்க்கரைக்காகன தேவை, 2.20 கோடி டன் என்ற அளவில் தான் உள்ளது.சர்க்கரை ஆலைகளின், நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு, மத்-திய அரசு, இத்துறை நிறுவனங்களுக்கு, வட்டி இல்லாமல், வங்கிகளில் இருந்து கடன் வழங்க திட்டமிட்டுள்ளதாக, சுதிர் குமார் மேலும் கூறினார்.

## மதுரையில் அமைகிறது "மெகா' காய்கறி வணிக வளாகம்



மதுரை: நீண்ட இழுபறிக்கு பின், தென்மாவட்ட காய்கறி உற்பத்தியை மையப்படுத்தி, மதுரை கொடிக்குளத்தில், "மெகா' காய்கறி வணிக வளாகம், விரைவில் அமைய உள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், 2010-11ன் கீழ், மாநில வேளாண் விற்பனை வாரியமும், மதுரை மாநகராட்சியும் இணைந்து, 85 கோடி ரூபாயில், மதுரையில், "மெகா' காய்கறி வணிக வளாகம் அமைக்க திட்டமிட்டன. மதுரை கொடிக்குளத்தில், இதற்காக, 20 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது

இதுகுறித்து, வேளாண் உதவி இயக்குனர் தவசுமுத்து கூறியதாவது: மதுரையில், "மெகா' காய்கறி வணிக வளாகம் அமைக்க, மத்திய அரசு சார்பில், 85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண் துறை அமைச்சகம் சார்பில், வணிக வளாகத்திற்கான இடம், இறுதி செய்யப்பட்டு உள்ளது. இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும். இந்த, "மெகா' காய்கறி வணிக வளாகம், தென்மாவட்ட மக்களுக்கான, சில்லர மற்றும் மொத்த காய்கறி விற்பனை வணிக வளாகமாக செயல்படும். காய்கறிகளை சுத்தம் செய்தல், தரம்பிரித்தல், குளிர்பதன கிடங்கில் வைத்தல், நவீன எடை மேடை, தொழில்நுட்ப பயிற்சி, வாகன போக்குவரத்து என, அனைத்து வசதிகளும், வணிக வளாகத்தில் நிறைந்திருக்கும். இவ்வாறு, தவசுமுத்து கூறினார்.

**கோமாரி நோய்: 4 ஆடுகள் பலி**

நெல்லை : நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே உள்ள வெள்ளம்குழியைச் சேர்ந்தவர் வேல்முருகன். ஆடு மேய்க்கும் தொழிலாளியான இவருக்கு சொந்தமான 4 ஆடுகள் இன்று மர்மமான முறையில் உயிரிழந்துள்ளன. நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவி வருகிறது. ஏற்கனவே 40 க்கும் மேற்பட்ட ஆடுகள் இப்பகுதியில் உயிரிழந்துள்ளதால் இந்த ஆடுகளும் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. இது குறித்து கால்நடை சுகாதாரத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

**சர்ரென சரிகிறது நிலத்தடி நீர்மட்டம்!**

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் நிலவும், நிலத்தடி நீர்மட்டம் குறித்து மத்திய, மாநில அரசுகளுக்கு, மாதம் தோறும் அறிக்கை அனுப்பப்படுகிறது. "நிலத்தடி நீர்மட்டம் எந்த நிலையில் உள்ளது, மழை பெய்தால் எத்தனை நாட்களில் நிலத்தடி நீர்மட்டம் "ரீ-சார்ஜ்' ஆகிறது, அதே நிலையில் எத்தனை நாட்களுக்கு நீடிக்கிறது, நிலத்தடி நீர்மட்டம் பாதிப்புக்கான காரணங்கள் என்ன' என்பது குறித்து, பொதுப்பணித்துறை நிலநீரியல் பிரிவு அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனர். அரசுக்கு மாதம்தோறும் அறிக்கை அனுப்புகின்றனர். கோவை மாவட்டத்தில், நிலத்தடி நீர்மட்டம் பாதுகாப்பான நிலையில் இருந்தாலும், திருப்பூர் மாவட்டத்தின் மண் தன்மையால், நிலத்தடி நீர்மட்டம், எட்ட முடியாத ஆழத்திற்கு, சரிந்துள்ளது அறிக்கையில் தெரியவந்துள்ளது.

**புரட்டி போட்ட வறட்சி !**

தமிழகத்தின் செழிப்பான பகுதியாக வர்ணிக்கப்படும் கொங்கு மண்டலத்தை, கடந்த 1998 - 2005 வரையிலான, ஏழுஆண்டுகளில், வறட்சி புரட்டிப்போட்டது. கோவை, திருப்பூர் மாவட்டங்களில், நிலத்தடி நீர்மட்டம் 1000 அடிக்கு கீழே

இறங்கியது. இதையடுத்து, சென்னை நீங்கலாக, மற்ற அனைத்து மாவட்டங்களும் வறட்சியான மாவட்டங்களாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். பயிர் சாகுபடிக்கு ஏற்ப வறட்சி நிவாரணம் அறிவித்தார். அரசு என்ன நிவாரணம் கொடுத்தாலும், மழை பெய்யாததால், நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

**பாலித்தீன் எனும் "பயங்கரவாதி'!**

முந்நூறு ஆண்டுகள் ஆனாலும் "மக்காமல்' கிடந்து மண்ணுக்கு கேடு விளைவிக்கும் பாலித்தீன் எனும் பூதம், விலங்குகளை கொன்று, மனிதர்களை பாதித்து, கடைசியில் மண்ணையும் மலடாக்கி வருகிறது. ஆம், நிலத்தின் தாய்ப்பால் என கூறத்தகுந்த நிலத்தடி நீர் மட்டம் உயர முக்கிய காரணமான , மழைநீர் மண்ணுக்குள் செல்லாமல் தடுக்கும் பாதகத்தை, சத்தமில்லாமல் செய்து வருகிறது பாலித்தீன் எனும் பயங்கர பொருள். கடந்த 15 ஆண்டுகளில் பாலித்தீன் பயன்பாடு, வெகுவாக அதிகரித்து, மண்ணுக்கு மட்டுமல்ல, நிலத்தடி நீர் மட்டத்துக்கும் வேட்டு வைத்துள்ளது. மனிதர்களின் பயன்படுத்தி தூக்கி எறியும், பாலித்தீன் குப்பை நிலப்பரப்பை போர்வை போன்று சூழ்ந்துள்ளதால் மழை பெய்தாலும், எல்லா பகுதியிலும் மண்ணிக்கு கீழே நீர் சமமாக புகுவதில்லை.இதனால், கடந்த 10 ஆண்டுகளில், நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக சரிந்துள்ளது. கோவை மாவட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் மழையளவு சராசரி அளவை விட குறைந்து வருகிறது. அதற்கேற்ப, நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டாலும், கடந்த ஆறு மாதங்களாக நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது, புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகிறது. ஆனால், திருப்பூர் மாவட்டத்தில் மழைப் பொழிவு சராசரி அளவில் 50 சதவீதம்மட்டுமே உள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக பாதித்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில், பெரும்பாலான நிலப்பரப்பில் சரளை மண் மற்றும் முரம்பு வகை மண் அதிகம் காணப்படுகிறது. மழை நீரை உடனடியாக உறிஞ்சி உள்ளிழுக்கும் தன்மை இவ்வகை மண்ணுக்கு உள்ளது.

அதே சமயம் ஆழ்துளை போட்டு, எடுக்கமுடியாத ஆழத்திற்கு நீர்வடிந்து சென்று விடுவதால்,மனிதர்களின் பயன்பாட்டிற்கு, எளிதில் தண்ணீர் கிடைப்பதில்லை என்கின்றனர் நிபுணர்கள். இவ்வகை நிலங்களில், நிலத்தடி நீர்மட்டமும் வேகமாக சரிந்து விடுவதால், பாதிப்புகள் அதிகம் தென்படுகிறது என்கிறார்கள், அனுபவம் வாய்ந்த நிலநீரியல் துறை அதிகாரிகள்.

**கோவையின் நிலை...:**

நிலத்தடி நீரை பாதுகாக்க, 2012ல் வெளியிடப்பட்ட அரசாணையில், கோவை மாவட்டத்தின் பகுதிகள் நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில், நிலத்தடி நீர் மட்டம் பாதுகாப்பான பகுதியாக ஆனைமலை, காரமடை வட்டாரங்களும்; நிலத்தடி நீருக்கு அதிக நெருக்கடி இல்லாத பகுதிகளாக கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு, சுல்தான்பேட்டை, சூலூர் வட்டாரங்களும்; நிலத்தடி நீருக்கு அதிகம் பாதிப்புள்ள பகுதிகளாக அன்னூர், மதுக்கரை, பொள்ளாச்சி தெற்கு, பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார்சாமக் குளம், தொண்டாமுத்தூர் வட்டாரங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தடி நீருக்கு நெருக்கடி நிறைந்த பகுதிகள் எதுவும் கோவை மாவட்டத்தில் இல்லை.

**நிலநீர் பிரச்னைக்கு விமோசனம்?**

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் மழை வளத்தை பெருக்க, மரங்கள் வேண்டும். இடம் இருக்கும் இடங்களில் எல்லாம், மரம் வளர்க்கும் திட்டத்தை ஊக்குவிக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கும், மண்ணுக்கும், நிலத்தடி நீருக்கும் பேராபத்தை விளைவிக்கும் பாலித்தீன் கவர் பயன்பாட்டை தடை செய்ய வேண்டும். அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களை கையாண்டு, மழைநீரை முழுமையாக சேமிக்க வேண்டும். விவசாய நிலங்களில், கிணறு, ஆழ்குழாய் கிணறு உள்ள இடங்களில், மழை நீரை தேக்க வேண்டும். தாழ்வான பகுதிகளில் பண்ணைக்குட்டை அமைக்க வேண்டும். திருப்பூரின் மண் தன்மையால் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்படுகிறது. இதை தவிர்க்க, அங்கு கூடுதலாக மரம் வளர்த்து, வெப்ப சீதோஷ்ண நிலையை குறைக்க வேண்டும்

**திருப்பூரின் நிலை...:**

திருப்பூர் மாவட்டத்தில், நிலத்தடி நீர் மட்டம் பாதுகாப்பான பகுதியாக தாராபுரம், மடத்துக்குளம், ஊத்துக்குளி வட்டாரங்களும்; நிலத்தடி நீருக்கு அதிக நெருக்கடி இல்லாத பகுதிகளாக குடிமங்கலம், காங்கேயம், குண்டடம், மூலனூர், திருப்பூர், உடுமலை, வெள்ளகோவில் வட்டாரங்களும்; நெருக்கடி உள்ள பகுதியாக பல்லடம் வட்டாரமும்; அதிகம் பாதிப்புள்ள பகுதிகளாக அவிநாசி, பொங்கலூர் வட்டாரங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில், நிலத்தடி நீரை உறிஞ்சி விற்பது, குடிநீர் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் எடுப்பது, தொழிற்சாலை உபயோகம், வர்த்தக பயன்பாட்டு கட்டடங்களுக்கு ஆழ்குழாய் அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. நிலநீரியல் அதிகாரிகள் ஆய்வுக்கு பிறகு, பாதுகாப்பான பகுதியாக வகைப்படுத்திய இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.

**7ஆண்டு வறட்சி!**

இந்தியாவில், தமிழகம், கேரளம், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட ஒன்பது மாநிலங்களில், நிலத்தடி நீர்மட்டம் ஆய்வு செய்யப்படுகிறது. நூற்றாண்டு புள்ளி விபரங்ககளை ஒப்பிடும் போது, தமிழகத்தில் மூன்று முறை வறட்சி ஏற்பட்டுள்ளது. இதில், 1998 - 2005 வரையிலான ஏழு ஆண்டுகளில் ஏற்பட்ட தொடர் வறட்சி போன்று, கடந்த 40 ஆண்டுகளில் ஏற்பட்டதில்லை. ஒவ்வொரு ஆண்டும் மழைப்பொழிவு குறைந்து வருவதால், நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்க அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. முதற்கட்டமாக, வர்த்தக ரீதியாக ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு புதிய நடைமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்மட்டத்துக்கு ஆபத்து, நெருக்கடி நிறைந்த பகுதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதியில் வர்த்தக ரீதியாக ஆழ்குழாய் கிணறு அமைக்க, பொதுப்பணித்துறை நிலநீரியல் பிரிவில் தடையின்மை சான்று பெற வேண்டும் என, கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக துறை வல்லுனர்கள் கூறுகின்றனர்.

கடந்த இரண்டு மாதத்தில், கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்ட நிலவரத்தில் பெரியஅளவில் மாற்றங்கள் இல்லை. ஆனால், திருப்பூரில் ஆகஸ்ட்டில் குறைந்தபட்ச நிலத்தடி நீர்மட்டத்தின் ஆழம் 11.5 மீட்டரில் இருந்து, அக்டோபரில் குறைந்தபட்சமாக 30 மீட்டர் அளவுக்கு மாறியுள்ளது

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை 28ம் தேதி நடக்கிறது' என, மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை 28ம் தேதி காலை 10 மணிக்கு கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடக்கிறது.விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண் இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீ வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 29ம் தேதி, காலை, 10.30 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில், வேளாண்துறை அதிகாரிகள் பங்கேற்று, விவசாயிகளுக்கான கடனுதவிகள், தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கவுள்ளனர். டத்தில் பங்கேற்று பயன்பெறலாம்.

## வயலில் தண்ணீர் சூழ்ந்ததால் நெல் முளைப்பு அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு

வாலாஜாபாத் : அறுவடை இயந்திரம் கிடைக்காததால், வயலில் விளைந்த நெற்பயிர் தண்ணீரில் மூழ்கி, நெல் முளைப்பு விடும் நிலை ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரம் அடுத்த, கோவிந்தவாடி அகரம் பகுதியில், நெற்பயிர் கடந்த வாரம் அறுவடைக்கு தயாராகியது. அப்போது, மழை பெய்ததால் நெற் கதிர்கள் சாய்ந்தன. அறுவடை இயந்திரத்தையும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.தண்ணீரில் சாய்ந்த நெல் கதிர்கள் முளைத்து விட்டன. சில விவசாயிகள் வெளியூரில் இருந்து கூலி ஆட்களை அழைத்து வந்து, அறுவடை செய்யும் முயற்சியில், ஈடுபட்டுள்ளனர்.கோவிந்தவாடி அகரம் விவசாயி கோபால் கூறுகையில், "அறுவடை செய்யும் பருவத்தில் மழை பெய்து, வயல்வெளியில் தண்ணீர் சூழ்ந்தது. தண்ணீரை அகற்றுவதற்கு வயலில் வடிகால்வாய் வசதி ஏற்படுத்தினோம். அறுவடை இயந்திரம் வைத்திருப்பவர்களை அணுகினால், தண்ணீரில் அறுவடை செய்வதற்கு கூடுதல் கட்டணம் கேட்கின்றனர். சாய்ந்த நெற்கதிர்கள், முளைக்க தொடங்கி விட்டன. வேறு வழியின்றி, அதிக பணம் கொடுத்து இயந்திர அறுவடைக்கு, ஒப்புக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது," என்றார்.

### விதை நெல் கேட்டு ஆர்ப்பாட்டம்

ஆர்.கே.பேட்டை : விதை வழங்காதது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, வேளாண் விரிவாக்க மையம் முன், விவசாயிகள், நேற்று, ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்.கே.பேட்டை வேளாண் விரிவாக்க மையம் முன், தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில், நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.ஆர்.கே.பேட்டை வேளாண் விரிவாக்க மையத்தில், விதை நெல் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்படுவதில்லை. வேளாண் கருவிகள், முறையான நபர்களுக்கு வழங்குவதில்லை. மானியம், முழுமையாக வசாயிகளுக்கு கிடைக்கவில்லை.

மேலும், மண் பரிசோதனைக்கு 20 ரூபாய் கட்டணம் என்பதற்கு மாறாக, 180 ரூபாய்வசூலிக்கப்படுகிறது என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, விவசாயிகள், ஆர்ப்பாட்டம் நடத்தினர்.பின், உதவி வேளாண் இயக்குனர் முகமது ரபீக், விலைப்பட்டியல் எழுதி வைக்கவும், ரசீது வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும், கூடுதலாக விதை நெல் வரவழைத்து உடனே வழங்கப்படும் என, உறுதி அளித்தார். இதையடுத்து, ஆர்ப்பாட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**கோமாரி நோய் தாக்குதலுக்கு 78 பசு மாடுகள் பரிதாப பலி**

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில், கோமாரி நோய் தாக்குதலுக்கு இதுவரை, 78 பசுமாடுகள் பலியாகியுள்ளன.
திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் விவசாயத்தை சார்ந்துள்ள மாவட்டம். மேலும் கிராமப்புறங்களில் பால் உற்பத்தியை மட்டுமே பிரதானமாக நம்பி உள்ளனர். கடந்த, ஒரு மாதமாக மாவட்டம், முழுவதும் கோமாரி நோய் தாக்கத்தால் பால் உற்பத்தி குறைவு ஏற்பட்டதோடு, 78 மாடுகள் பலியாகின. இதனால் மாவட்டம் முழுவதும் கால்நடை மருத்துவ குழுவினர் கோமாரி நோய் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.
கோமாரி நோய் தாக்கம் அதிகமாக இருப்பதால் வழக்கமாக தீபத்திருவிழாவில் நடத்தப்படும் கால்நடை சந்தை ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் மேலும் மாடுகள் தொடர்ந்து பலியாகி வருகின்றன. இதில் ஆரணி டவுன் களத்து மேட்டு தெருவை சேர்ந்த சிவலிங்கம், இவருக்கு சொந்தமான, நான்கு கறவை மாடுகள், நான்கு கன்றுகுட்டிகள் உள்ளன, இவை கடந்த ஒரு வாரமாக, சிவலிங்கத்தின் மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டன.
தகவலறிந்த ஆரணி கால்நடை மருத்துவர் கிருஷ்ணகுமார் தலைமையில், அப்பகுதியில் மருத்துவ குழுவினர் தீவிர தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் சிவலிங்கத்திற்கு சொந்தமான 4 பசுமாடுகளும் பலியாகின. மேலும் அப்பகுதியில், 20க்கும் மேற்பட்ட மாடுகள் கோமாரி நோயால்

பாதிக்கப்பட்டுள்ளன. கோமாரி நோய் தாக்குதலினால் தொடர்ந்து பசுமாடுகள் பலியாவதை தடுக்க முடியாததால், விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

## ஆலை அரவைக்கு பாரம் ஏற்றி வந்த கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

மோகனூர்: கோமாரி நோய் தாக்குதல் எதிரொலியாக, மோகனூர் சர்க்கரை ஆலை வண்டிகேட்டில், அரவைக்கு கரும்பு ஏற்றி வந்த மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்புத்துறையினர் தடுப்பூசி போட்டனர்.

தமிழகத்தில் கோமாரி நோய் தாக்குதலில், ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன. அதனால், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள், விவசாயிகள் கடும் பீதி அடைந்துள்ளனர். கால்நடை பராமரிப்புத்துறை மூலம், பல்வேறு தடுப்பு நடவடிக்கை முடிக்கவிடப்பட்டுள்ளது.

அதன்படி, மாநிலம் முழுவதும், வீடு வீடாக சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அதை தொடர்ந்து கோமாரி நோய் தாக்கம் சற்று குறைந்துள்ளது.

மேலும், நோய் பரவாமல் இருக்க, கால்நடை உள்ள பகுதிகளில் பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்படுகிறது. இந்நிலையில், மோகனூர் சர்க்கரை ஆலையில், நடப்பு ஆண்டு அரவை பருவம் கடந்த, 16ம் தேதி துவங்கியது. அதை தொடர்ந்து, சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள கரும்பு வெட்டி அரவைக்கு கொண்டுவரப்படுகிறது.

அரவைக்கு கரும்பு பாரம் வெற்றிக்கொண்டு வெளியூரில் இருந்து வரும் கால்நடைகள் மூலம், கோமாரி நோய் பரவாமல் தடுக்கும் வகையில், மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்புத்துறை மூலம், தடுப்பூசி போடும் முகாம், ஆலை வண்டிக்கேட்டில் நேற்று நடந்தது.

மருத்துவர் குழுவினர், கோமாரி தடுப்பூசி போட்டுக்கொள்ளாத கால்நடைகளுக்கு, தடுப்பூசி போட்டனர். மதியம் முதல், மாலை வரை நடந்த முகாமில், நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

**கர்நாடகாவில் மழையால் கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

ஓசூர்: கர்நாடகா மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழையால், ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணைக்கு, நீர் வரத்து அதிகரித்துள்ளது.
கர்நாடகா மாநிலம், நந்திஹில்ஸ் மலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆறு தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்கள் உள்பட, ஐந்து மாவட்டங்கள் வழியாக சென்று கடலூரில் வங்க கடலில் கலக்கிறது. தமிழக-கர்நாடகா மாநில எல்லையான ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அணை கட்டடப்பட்டுள்ளது. இந்த அணையின் மொத்த நீர்ட்டம், 44.34 அடி.அணைக்கு கடந்த சில நாட்களாக சராசரியாக வினாடிக்கு, 200 கன அடிக்கு மேல் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் கடந்த, மூன்று நாட்களாக கர்நாடகா மாநிலம் பெங்களூரு மற்றும் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால்ல கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.
நேற்று காலை நிலவரபடி அணைக்கு, 750 கன அடிநீர் வந்தது. அணையின் நீர்மட்டம், 42.3 அடியாக உள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து நேற்று காலை வினாடிக்கு, 450 கனஅடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்பட்டது.தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், ஆற்றங்கரையோரம் தாழ்வான பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மேட்டுப்பாங்கான பகுதிக்கு செல்லுமாறு, ஓசூர் தாசில்தார் அமீதுல்லா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**"காய்கறி விலை குறைகிறது' மகிழ்ச்சியில் இல்லத்தரசிகள்**

திருச்சி: திருச்சி காந்திமார்கெட்டில் காய்கறி விலை குறைந்து வருவதால் சைவ சாப்பாட்டு பிரியர்களும், இல்லத்தரசிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
திருச்சி காந்திமார்கெட்டிற்கு, ஊட்டி, திண்டுக்கல், மணப்பாறை ஆகிய பகுதிகள், மற்றும் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் காய்கறி விற்பனைக்காக வருகிறது. தொடர் மழை காரணமாக கடந்த சில நாட்களாக காய்கறி வரத்து குறைந்தது.

அதோடு தொடர் முகூர்த்தம், பண்டிகை போன்ற காரணங்களால் காய்கறி விலை உயர்ந்தது. இதனால் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மழை ஓய்ந்ததாலும், பனி காலம், முகூர்த்த தினங்கள் குறைவு போன்ற காரணங்களால் இந்த வாரம் காய்கறி விலை குறைந்து வருகிறது.

கடந்த வாரத்தில் அதிகபட்சமாக ஒரு கிலோ பெல்லாரி வெங்காயம் 60 ரூபாய் வரை விற்பனையானது. நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ 40 ரூபாய்க்கு விற்பனையாகிறது. அதேபோல் சின்ன வெங்காயமும் 10 ரூபாய் குறைந்து ஒரு கிலோ 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

48 ரூபாய்க்கு விற்பனையான தக்காளி, நேற்று 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிலோ கத்திரிக்காய் 25 ரூபாய், வெண்டைக்காய் 20 ரூபாய், பீன்ஸ் 27 ரூபாய், கேரட் 50 ரூபாய், பாகற்காய் 30 ரூபாய், பீட்ரூட் 20 ரூபாய், சவ்சவ் 20 ரூபாய், முள்ளங்கி 25 ரூபாய், இஞ்சி 80 ரூபாய், பழைய இஞ்சி 180 ரூபாய், முருங்கை 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த காய்கறிகள் அனைத்துமே கடந்த வாரத்தை விட விலை குறைந்துள்ளது.

வரும் நாட்களில் காய்கறி விலை மேலும் குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்தனர். தற்போது கார்த்திகை மாதம் என்பதால், ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதம் இருந்து வருகின்றனர்.

இந்த சமயத்தில் காய்கறிகளின் விலை குறைந்து வருவதால், ஐயப்ப பக்தர்கள் மட்டுமின்றி சைவ சாப்பாட்டு பிரியர்களும் இல்லத்தரசிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**குண்டாறு அணை பகுதியில் தண்ணீர் கசிவு அதிகரிப்பு**

செங்கோட்டை:குண்டாறு அணை ஷட்டர் பகுதியில் தண்ணீர் கசிவு மேலும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

செங்கோட்டை மேற்கு தொடர்ச்சி மலைடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது குண்டாறு அணைப்பகுதி குற்றாலத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் இங்கு

அதிகளவில் வருகை தருவதுண்டு. மேலும் எந்தவித மழையினாலும் உடனே நிரம்பிடும் அணையாகவும். இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதியும் பெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் தொடர்மழையால் அணை தனது முழு கொள்ளளவை நிரம்பி வழிந்து வருகிறது. இந்நிலையில் அணையின் ஷட்டர் பகுதியில் நேற்று முன்தினம் தண்ணீர் கசிவு ஏற்பட்டு வந்த நிலையில் அதனை சாக்கு வைத்து அடைக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று தண்ணீரின் வேகத்தினாலோ அல்லது யாராவது அங்கு வைக்கப்பட்டிருந்த சாக்கினை எடுத்தார்களா என்பது குறித்து மர்மமாகவே உள்ளது. ஆனாலும் சாக்கு வைத்து அடைக்கப்பட்டிருந்த பகுதியில் தண்ணீரின் வேகம் மேலும் அதிகரித்துள்ள நிலையில் அணைப்பகுதியை நம்பி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**எண்ணெய்வித்து பயிர்சாகுபடி பயிற்சி முகாம்**

புதூர்: புதூர் வட்டார விவசாயிகளுக்கான ஐசோபாம் எண்ணெய் வித்துகள் திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்து பயிர் சாகுபடி தொழில்நுட்ப 2 நாள் பயிற்சி முகாம் நடந்தது.புதூர் வட்டாரத்தில் பரவலாக பயிரிடப்படும் எண்ணெய் வித்துப்பயிர்களான எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களை லாபகரமாக பயிரிட வேண்டிய பயிர் சாகுபடி முறைகள் மற்றும் நவீன தொழில் நுட்ப செயல்முறை விளக்க ஆலோசனை முகாம் தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி தலைமையில் நடந்தது. புதூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முருகப்பன் முன்னிலை வகித்தார். வேளாண்மை துணை அலுவலர் சீனிவாசன் வரவேற்றார். எள் மற்றும் சூரியகாந்தி பயிர்களின் எளிய சாகுபடி முறையான வீடியோ படக் காட்சி மற்றும் செயல்விளக்க பயிற்சிகளான பூஞ்சான விதை நேர்த்தி,பூச்சி மருந்து விதை நேர்த்தி மற்றும் உயர் உர விதை நேர்த்தி உட்பட பல்வேறு தொழில் நுட்ப பயிற்சிகளை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ஜானகி, அட்மா திட்ட புதூர் வட்டார துணை தொழில் நுட்ப மேலாளாளர் தனபாலன், புதூர் வேளாண்மை உதவி அலுவலர்கள் ராஜ்குமார், ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலை வகித்து விவசாயிகளுக்கு பயிற்சி

அளித்தனர். புதூர் வட்டார 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட விவசாயிகள் அனைவர்களுக்கும் ஊக்க தொகை வழங்கப்பட்டது. பயிற்சிக்கான உதவிகளை வேளாண் சிறப்பு அலுவலர்கள் துர்கா மற்றும் செல்லபாண்டி செய்திருந்தனர்.

**கோமாரி நோய் தாக்குதல் கூம்பூரில் தடுப்பூசி முகாம்**

குஜிலியம்பாறை : கூம்பூர் ஊராட்சி பகுதியில், கால்நடைகளுக்கான கோமாரி நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. இதுவரை எட்டு கால்நடைகள் இறந்துள்ளதாக, கால்நடைகளை இழந்தோர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கூம்பூர் கால்நடைத்துறை சார்பில், டாக்டர் சசிக்குமார் தலைமையில், மருத்துவ குழுவினர், பாம்புலுபட்டி, நாராநாயக்கன்புதூர், நாகுல்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் முகாம் அமைத்து, கால்நடைகளுக்கான, நோய் தடுப்பூசிகளை போட்டு வருகின்றனர். மேலும், கால்நடைகள் கட்டும் இடங்களை, தூய்மையாக வைத்திருத்தல், நோய் எதிர்ப்பு சக்திக்கான தீவனங்களை வழங்க கோருதல் உள்ளிட்ட அறிவுறைகளை வழங்கி வருகின்றனர். டாக்டர் சசிக்குமார் கூறுகையில்,"" நோய் பாதிப்பு முழுமையாக குறைந்துள்ளது. தொடர்ச்சியாக முகாமிட்டு, கால்நடைகளுக்கு தேவையான பரிசோதனைகள், முதல் உதவிகளை செய்து வருகிறோம். தற்போது நோய் பாதிப்பு கட்டுக்குள் உள்ளது," என்றார்.

**அவரை விளைச்சல் அதிகம் விலையும் கிடைக்கிறது**

தேவாரம் : மண்டல பூஜை சீசன் எதிரொலியாக, அவரைக்கு நல்ல விலை கிடைக்கிறது. விளைச்சலும் நன்கு இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.தேவாரம், பல்லவராயன்பட்டி, டி.மீனாட்சிபுரம், தம்மிநாயக்கன்பட்டி, அய்யம்பட்டி பகுதியில் 5000 ஏக்கரில் அவரை சாகுபடி நடக்கிறது. தற்போது, அவரை எடுப்பு மும்முரமாக உள்ளது. கிலோ 20 ரூபாய்க்கு மேல் விற்பதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது.

மேலச்சிந்தலைச்சேரியை சேர்ந்த விவசாயி விஜயன் கூறுகையில், "சபரிமலை

மண்டல பூஜைக்கு பக்தர்கள் விரதமிருப்பதால், காய்கறிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. தற்போது, நிலவும் பனிப்பொழிவால் பூக்கள் உதிர்கின்றன. அவ்வப்போது மழை பெய்வதால், நல்ல மகசூல் கிடைக்கிறது. விலை கிடைப்பதால் அவரை பயிரிட்டவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும், என்றார்'.

**விவசாயிகள்எதிர்பார்ப்பு**

சாயல்குடி: கடந்தாண்டு பயிர் காப்பீடு செய்ததற்காக, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு, அரசு, 144 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. இம்மாதத்திற்குள் வழங்கப்படும் என்றார் கலெக்டர் நந்தகுமார்.மாதம் முடிய சில நாட்களே உள்ளது. கடந்தாண்டு போல வழங்கமாட்டார்களோ என்ற சந்தேகம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. விரைவில் வழங்க வேண்டும், என வலியுறுத்தி வருகின்றனர் தொடர்ந்து ஏமாற்றும் பருவ மழை 20 ஆயிரம் ஏக்கர் நெல் கேள்விக்குறி முதுகுளத்தூர்: முதுகுளத்தூர், கடலாடி, கமுதி தாலுகாக்களில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக பருவமழை பொய்த்ததால், நெற்பயிர்கள் கருக துவங்கியுள்ளன. 20 ஆயிரம் ஏக்கர் நெல் விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது. சமீபத்தில் பெய்த பருவமழையை நம்பி முதுகுளத்தூர், கமுதி, கடலாடி தாலுகாக்களில், 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்யாததால், கடன் வாங்கி செய்த ஆரம்ப கட்ட விவசாய பணிகளோடு, போதிய தண்ணீரின்றி, நெற்பயிர்கள் கருக ஆரம்பித்துள்ளன. கரிசல் நிலங்களில் நெற்பயிர் 10 நாட்களுக்கு மட்டுமே தாக்குபிடிக்கும், ஆனால் வண்டல் நிலங்களில் <உள்ள நெல் பயிர்கள் கருக துவங்கியதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். மேலச்சிறுபோது விவசாயி ராமசாமி கூறும்போது: கடந்தாண்டு பொய்த்துப்போன விவசாயத்திற்கு, வறட்சி நிவாரண தொகை பாரபட்சமாக வழங்கபட்டது. மேல, கீழச்சிறுபோது, கோகொண்டான் உட்பட 15 க்கும் அதிகமான கிராம விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். மத்திய, மாநில அரசுகள், பாதிக்கப்பட்ட விவசாயத்திற்கு, உரிய இழப்பீட்டு வழங்க வேண்டும்," என்றார்.

**மீன் பண்ணை அமைக்க பயனாளிகள் அழைப்பு**

விருதுநகர்: விருதுநகர் மாவட்ட நீர்வள நிலவள திட்டத்தின் கீழ், மண் குட்டையில் மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைக்க, 2. 55 லட்சம் ரூபாய் கட்டுமானத்திற்கும், 45 ஆயிரம் ரூபாய் உள்ளீட்டு செவினம் செய்ய அர்ஜூனா உபவடி பகுதியில், பயனாளி ஒருவர் தேர்வு செய்யப்பட <உள்ளார். பயனாளிக்கு 1.50 ஏக்கர் சொந்த நிலம், நீர்வசதி உள்ள கிணறு அல்லது ஆழ்துளை கிணறு மின் இணைப்பு, மோட்டார் பம்ப் செட் இருக்க வேண்டும்.

இதில் ஆர்வமுள்ளவர்கள், உதவி இயக்குனர் (மீன்வளத் துறை) அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். மீன்வள உதவி இயக்குனர் அலுவலகம், 286, ராஜாமணி ஹால், பழைய அருப்புக்கோட்டை ரோடு, விருதுநகர்- 626 001. தொலைபேசி: 04562- 244707 தொடர்பு கொள்ளலாம்

தென்காசி பகுதியில் பச்சை பசேலன பிசான பருவ நெற்பயிர்கள்

தென்காசி:தென்காசி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பிசான சாகுபடி நெற்பயிர்கள் பச்சை பசலேன்று நன்கு வளர்ந்து களையெடுக்கும் பணி நடைபெறுகிறது.

தென்காசி மற்றும் சுற்று வட்டார பகுதிகளான ஆய்க்குடி, இடைகால், சுந்தரபாண்டியபுரம், கீழப்புலியூர், ஆயிரப்பேரி, மேலகரம், நன்னகரம், குடியிருப்பு, காசிமேஜர்புரம், இலஞ்சி, செங்கோட்டை புளியரை, பண்பொழி உள்ளிட்ட பல இடங்களில் விவசாயிகள் பிசான சாகுபடி நெற்பயிர்களுக்கு களையெடுக்கும் பணி நடைபெறுகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன் நடவு பணிகள் முடிந்த நிலையில் தற்போது தென்காசி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் அடிக்கடி மழை பெய்து வருகிறது. இதனால் நீர் நிலைகளிலும் தண்ணீர் பெருகி வருகிறது. இதையடுத்து விவசாய நிலங்களில் உள்ள பயிர்கள் நல்ல முறையில் வளர்ச்சிடைந்து நிலத்தின் மேல் பச்சை போர்வையை போர்த்தியது போல் காட்சியளிக்கிறது. கடந்த ஆண்டு வறட்சியால் வாடிய விவசாயிகள் இந்த ஆண்டு நல்ல விளைச்சல் வரும் என எதிர்பார்த்து வருகின்றனர். மேலும் மழை காலங்களில் பயிர்களுக்கு வரும் நோய் குறித்தும், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் வேளாண்மை துறையினர் விவசாயிகளுக்கு அறிவுரை கூறி வருகின்றனர்.

தினகரன்

**இன்றையவேளாண்செய்திகள்**

**27.11.2013**

## மேட்டூர் நீர்மட்டம் 84.84 அடியாக உயர்ந்தது

மேட்டூர்: காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 5,429 கன அடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் நேற்று, காவிரி நீர் பிடிப்பு பகுதியில் திடீரென மழை பெய்தது. இதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 15,997 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர் மட்டம் 84.84 அடி.

## நீலகிரியில் தொடர்மழையால் மேலும் பாறைகள் சரியும் அபாயம்



குன்னூர்: தொடர்ந்து மழை பெய்து வருவதால்,முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேட்டுப்பாளையம்- குன்னூர் இடையே மலைரயில் போக்குவரத்து வரும் 4ம் தேதி வரை ரத்து செய்யப்பட்டுள்ளது. நீலகிரியில் கடந்த சில நாளாக பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த 23ம் தேதி அதிகாலை

பெய்த பலத்த மழையில், கல்லார்- அடர்லி இடையே அடர் வனப்பகுதியில் 3 இடங்களில் மலைரயில் பாதையில் மண்சரிவு மற்றும் ராட்சத பாறைகள் உருண்டு விழுந்தன. இதனால், மலைரயில் போக்குவரத்து 3 நாட்களுக்கு ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்தது. தண்டவாளத்தில் விழுந்த பாறைகளை அகற்றும் பணி முழு வீச்சில் நடந்தது. இன்று முதல் மலைரயில் இயங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், டிசம்பர் 4ம் தேதி வரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், தொடர்ந்து மழை பெய்வதால் பாறைகள், மண்திட்டு சரிந்து விழும் அபாயம் உள்ளது. எனவே, முன்எச்சரிக்கை நடவடிக்கையாக வரும் 4ம் தேதி வரை மலைரயில் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றனர்.

**நெல்லை அருகே மர்ம நோய் தாக்கி 40 ஆடுகள் பலி**



நெல்லை: நெல்லை அருகே உள்ள அரியகுளத்தில் முருகன்(55), சுந்தரம்(60) ஆகிய இருவரும் நூற்றுக்கணக்கான ஆடுகளை சொந்தமாக வளர்த்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று காலை பட்டியை திறந்த பார்த்தபோது, அதிலிருந்த 40 ஆடுகள் வாயில் நுரை தள்ளியபடி இறந்து கிடந்தன. இதை பார்த்த இருவரும் அதிர்ச்சியடைந்து கதறி அழுதனர். மர்ம நோய் தாக்கியதால் ஆடுகள் இறந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.தகவல் அறிந்து கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் கங்காராஜ் தலைமையில் மருத்துவக்குழுவினர் சென்று பார்வையிட்டனர். 'கோமாரி நோய் மாடுகளுக்கு தான் ஏற்படும்.

ஆடுகளை தாக்காது. பரிசோதனைக்கு பிறகுதான் ஆடுகள் இறந்ததற்கான காரணம் தெரியும்' என அதிகாரிகள் கூறினர்.

**எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம் ஐகோர்ட் தீர்ப்புக்கு வரவேற்பு**



சென்னை: மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி, நேற்று காலை சென்னை விமான நிலையத்தில் அளித்த பேட்டி: கெயில் நிறுவனம் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்துக்கு தமிழக அரசு தடை விதித்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை வரவேற்கிறேன். இது ஒரு நல்ல திட்டம். மக்களுக்கான ரூ.3 ஆயிரம் கோடி திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தி உள்ளது. இந்த திட்டம் நிறைவேறிய பிறகு சமையலுக்கான எரிவாயு மக்களுக்கு நேரடியாக குழாய் மூலம் வீடுகளுக்கே சென்று விடும். பலகோடி மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது ஒரு சிலர் பாதிக்கத்தான் செய்வார்கள். அதற்காக அந்த திட்டமே வேண்டாம் என்று கூறுவது சரியல்ல.

மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்களை மாநில அரசுகள் எதிர்க்க கூடாது. விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் இந்த திட்டம் அமல்படுத்தப்படும். ஓய்வு பெறும் அரசு அதிகாரிகள் அரசியல் கட்சிகளில் சேருவதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் சிபாரிசு செய்துள்ளது. அதை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம். வேண்டுமென்றால் ஓய்வு பெறும் அதிகாரிகள் அரசியல் கட்சிகளில் சேர்ந் தால், சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள்

குறைந்தது ஓராண்டு காலத்துக்காவது அவர்களுக்கு எந்த பொறுப்பும் வழங்க கூடாது என்ற விதிமுறையை அனைத்து கட்சிகளும் ஏற்று அமல்படுத்தினால் நல்லது.ஆனாலும் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையை மத்திய அரசு நிராகரித்து விடவில்லை. இது சம்பந்தமாக அனைத்து கட்சிக ளின் கருத்துக்களை கேட்டு மத்திய அரசு இதுகுறித்து முடிவு செய்யும். இவ்வாறு நாராயணசாமி கூறினார்.

**திருவண்ணாமலை மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை**

வேலூர், : வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் பரவலாக மிதமான மழை பெய்தது. சோளிங்கர் மற்றும் சேத்துப்பட்டில் இடியுடன் கூடிய கன மழை கொட்டியது. இதில் 2 பேர் பலியாயினர்.

அந்தமான் அருகே வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதற்கேற்ப நேற்று வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதையடுத்து மாலையில் இரண்டு மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது.

வேலூர் மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, தொரப்பாடி, அரியூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் நேற்று மாலை 3.30 மணி முதல் 5.30 மணி வரை லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்தது. திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம் பகுதிகளில் மாலை 6 மணிக்கு மேல் லேசான மழை பெய்தது.

சோளிங்கரில் மாலை 3 மணிக்கு மேல் சுமார் 2 மணி நேரம் இடியுடன் கூடிய பலத்த மழை வெளுத்து வாங்கியது. அதேபோல் அரக்கோணம், ஆற்காடு, வாலாஜா, ராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம் பகுதிகளில் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை மிதமானது முதல் பலத்த மழை வரை பெய்தது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆரணியில் மாலை 3 மணிக்கு வானம் இருண்டு சுமார் ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்தது. செய்யாறு மற்றும் வந்தவாசியில் லேசான மழையும், சேத்துப்பட்டு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மாலை 3 மணி

முதல் 4 மணி வரை இடியுடன் கூடிய பலத்த மழையும் பெய்தது. சேத்துப்பட்டு அடுத்த ராஜம்மாபுரத்தில் இந்திரபாண்டியன்(22), இவரது தாய் சுந்தரி ஆகிய 2 பேர் இடித்தாக்கி சம்பவ இடத்திலேயே உடல் கருகி இறந்தனர். போளூர் மற்றும் திருவண்ணாமலையில் லேசான மழை பெய்தது. அந்தமான் அருகே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மழை தொடரும் என்பதால் இரண்டு மாவட்டங்களிலும் நிலக்கடலை, மஞ்சள், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**ஹெலன் புயலால் பாதிக்கப்பட்ட ஏனாம் பகுதி விவசாயிகளுக்கு நிதி உதவி**

சித்தூர், : ஹெலன் புயலால் பாதிக்கப்பட்ட ஏனாம் பகுதி விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக புதுவை மின்சாரவாரித்துறை அமைச்சர் சித்தூரில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். ஆந்திர மாநிலத்தில் உள்ள புதுச்சேரி அரசுக்கு சொந்தமான ஏனாம் பகுதியில் ஹெலன் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களை புதுச்சேரி மின்வாரியத்துறை அமைச்சர் டி.தியாகராஜன் நேற்று பார்வையிட முடிவு செய்தார். அதன்படி ஏனாம் பகுதியில் உள்ள கடலோர பகுதிகளை அவர் பார்வையிட்டார். பின்னர் சித்தூரில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் ஏனாம் பகுதியில் புயல் காரணமாக நீரில் மூழ்கிய விவசாய நிலங்களுக்கான விவரங்களையும் மற்றும் பல்வேறு துறைகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை குறித்து ஆலோசனை நடத்தினார். பின்னர் அமைச்சர் டி.தியாகராஜன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:ஹெலன் புயல் காரணமாக ஏனாம் பகுதியில் பாதிக்கப்பட்ட பகுதிகள், விவிசாயிகளின் நிலங்கள் மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கை குறித்து அனைத்து விவரங்களை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமிக்கு பரிந்துரை செய்கிறேன். மேலும் இந்த பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்க முதல்வருடன் ஆலோசனை நடத்த உள்ளேன். என்றார். பின்னர் ஹெலன் புயல் காரணமாக ஏனாம் பகுதியில் உள்ள கடலில் நீரில் மூழ்கி பலியான வீரபாகு வீட்டு சென்று அவரின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

**பரமத்திவேலூர் அருகே பிலிக்கல்பாளையம் மண்டியில் வெல்லம் விலை உயர்வு**

பரமத்திவேலூர், : பரமத்திவேலூர் அருகே பிலிக்கல்பாளையம் வெல்லமண்டியில் நடந்த ஏலத்தில், வெல்லம் அதிக விலைக்கு விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.
பரமத்திவேலூர் அருகே சோழசிராமணி, மாரப்பன்பாளையம், கொத்தமங்கலம், சி.கவுண்டம்பாளையம், திருநெல்லிகோயில், ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம் ஆகிய பகுதிகளில் கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதை அப்பகுதி விவசாயிகள் வாங்கி, தங்கள் கொட்டகையில் காய்ச்சி வெல்லம் தயாரிக்கின்றனர்.
இங்கு உற்பத்தியாகும் வெல்லத்தை, வாரம் இருமுறை கூடும் பிலிக்கல்பாளையம் வெல்லமண்டிக்கு கொண்டு வந்து ஏலம் விடுவார்கள். இந்த ஏலத்தில் பழனி, ஒட்டன்சத்திரம், மதுரை, திண்டுக்கல், கரூர், சேலம், நாமக்கல் மற்றும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய வெளிமாநிலங்களை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்து செல்வார்கள்.
இந்நிலையில் கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் வெல்லம் கூடுதல் விலைக்கு விற்பனையானது. இதனால் வெல்ல வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த வாரம் நடந்த ஏலத்திற்கு 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் சிப்பம் 8 ஆயிரம் மூட்டைகளும், அச்சுவெல்லம் 6 ஆயிரம் மூட்டைகளும் வந்திருந்தன. இதில் உருண்டை வெல்லம் மூட்டை 1க்கு ரூ1,200க்கு போனது. அச்சுவெல்லம் ரூ1,350க்கு போனது.
இந்த வாரம் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் சிப்பம் 7 ஆயிரம் மூட்டைகளும், அச்சுவெல்லம் 4 ஆயிரம் மூட்டைகளும் ஏலத்திற்கு வந்திருந்தன. இது கடந்த வாரத்தை விட வரத்து குறைந்திருந்தாலும் உருண்டை வெல்லம் ரூ1,300க்கும், அச்சுவெல்லம் ரூ1,500க்கும் ஏலம் போனது. அதே போல் கரும்பு விலை டன்னுக்கு ரூ3,300 முதல் ரூ3,400 வரை இருந்தது. இந்த வாரம் வெல்லம் அதிக விலைக்கு ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.11.2013**

**புயல் ‘லெஹர்’ மிக தீவிரம் அடைந்தது தமிழ்நாட்டில்இன்று சில இடங்களில் மழை பெய்யும்**



சென்னை

ஆந்திரா அருகே கரையை கடக்க உள்ள புயல் லெஹர் மிக தீவிரம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

புயல் மிக தீவிரம் அடைந்துள்ளது : மத்திய வங்க கடலில் உருவாகி அந்தமான் அருகே கரையை கடந்த ‘லெஹர்’ புயல் மீண்டும் வலுப்பெற்று அந்தமான் அருகே இருந்தது. அது இன்று பகலில் மேலும் வலுவடைந்து மிக தீவிர புயலாக மாறி உள்ளது.

அந்த புயல் அந்தமானில் இருந்து கிழக்கில் 360 கிலோ மீட்டர் தூரத்திலும், மசூலிப்பட்டினத்தில் இருந்து கிழக்கு தென்கிழக்கில் 990 கிலோ மீட்டர்

தூரத்திலும், காக்கிநாடாவில் இருந்து 920 கிலோ மீட்டர் தூரத்திலும், கலிங்கப்பட்டினத்தில் இருந்து தென்கிழக்கில் 870 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. இந்த புயல் மேற்கு வடமேற்கில் நகர்ந்து வருகிறது.

நாளை கரையை கடக்கும்

புயல் ஆந்திர மாநிலம் கடற்கரையில் மசூலிப்பட்டினத்திற்கும், கலிங்கப்பட்டினத்திற்கும் இடையே காக்கிநாடா அருகே நாளை (வியாழக்கிழமை) பகலில் கரையை கடக்கும். அப்போது கடல் அலைகள் ஆந்திர கடல் பகுதியில் உயரமாக வரும். காற்றும் பலமாக வீசும்.தமிழ்நாட்டில் இன்று (புதன்கிழமை) சில இடங்களில் மழை பெய்யும். இந்த தகவலை சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.இன்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர மழை அளவு வருமாறு:–

மழை அளவு

இரணியல் 5 செ.மீ., மேட்டுப்பாளையம் 4 செ.மீ., செங்கோட்டை, தக்கலை தலா 3 செ.மீ., ஆயக்குடி, தென்காசி, குளச்சல், திருச்செந்தூர் தலா 2 செ.மீ., நாகர்கோவில் 1 செ.மீ. மழை பெய்துள்ளது.

**காற்று வீசும் திசையில் கோமாரி நோய் பரவும் கால்நடை டாக்டர் தகவல்**

வெள்ளகோவில்,கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோயினால் அதிகப் பாதிப்பு உண்டு பாதிக்கப்பட்ட மாடுகளால் பலன் கிடைப்பது இல்லை. இந்தநோய் தீவனம், நீர், காற்று, ஆகியவற்றின் மூலமும் பரவுகிறது. காற்று வீசும் திசையில் காற்றுத்துகள் மூலம் சுமார் 300 மீட்டர் வரை இந்த நோய் பரவும்.எனவே விவசாய பெருமக்கள் மற்றும் கால்நடை வளர்போர் விழிப்புடன் இருக்குமாறு இந்தநோய்கள் அறிகுறிகள் கால்நடைகளில் ஏற்பட்டால் உடனே கால்நடை மருந்தகத்தில் உள்ள மருத்துவரிடம் தெரிவிக்குமாறு திருப்பூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர், தாராபுரம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.